அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 01/2014 (III)

எனது இலக்கம்: EST-2/POLCY/03/07100
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2016.05.16

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துதல்

மேற்குறித்த விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2014.01.21 ஆந் திகதிய 01/2014 என்னும் இலக்கம் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அதன் திருத்தமாக வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை குறித்து உங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. அவ் ஒழுங்குவிதிகளுக்கமைய மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்வதற்கு குறித்த எழுத்துப் பரீட்சை மற்றும் வாய்மூலப் பரீட்சையை 2016 ஆம் ஆண்டிலிருந்து வருடமொன்றிற்கு இரண்டு முறை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டுமென 2015.12.16 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. அதன்படி முதலாவது பந்தியில் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் ஒழுங்குவிதிகளுக்கமைய நடைபெறும் எழுத்துப் பரீட்சை மற்றும் வாய்மூலப் பரீட்சையை 2016ஆம் ஆண்டிலிருந்து பின்வருமாறு நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினால் அது குறித்து உங்களது நிறுவனத்தின் உத்தியோகத்தர்களை அறிவுறுத்துமாறு அறியத் தருகிறேன்.

**04. மற்றைய அரசகரும மொழி எழுத்துப் பரீட்சை**

04.1 அரசகரும மொழிகள் திணைக்களத்தின் www.languagesdept.gov.lk என்னும் இணையத்தளத்தினூடாக மாத்திரமே இப் பரீட்சைக்கு விண்ணப்பித்தல் வேண்டும். இணையத்தளத்தில் நுழையும் போது திரையில் தோன்றும் படிமுறைகளை பின்பற்ற வேண்டியதோடு, கேட்கப்பட்டுள்ள விடயங்களுக்காக சரியான தரவுகளை உள்ளடக்கியுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே பரீட்சையில் தோற்றுவதற்குரிய தகைமையைப் பெறுவர். ஒரு விண்ணப்பதாரரிற்கு ஒரு மொழியில் ஒரு மட்டத்திற்கு மாத்திரமே ஒரு தடவையின் போது விண்ணப்பிக்க முடியும். விஷேட தேவைகளுடைய ஒரு விண்ணப்பதாரராக இருப்பின் அது தொடர்பான விபரங்களை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட வேண்டும். (மாதிரி விண்ணப்பப்படிவம்- இணைப்பு 1).

04.2 எதிர் வரும் காலங்களில் இப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோருவதன் பொருட்டு வர்த்தமானியில் விளம்பரம் செய்யப்படாது என்பதோடு, இவ் எழுத்துப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகள் தொடர்ச்சியாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். அவ்வாறு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுள் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களுக்கு மார்ச் மாதத்திலும், பெப்ரவரி 01 முதல் ஜூலை 31 வரை கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களுக்கு செப்டெம்பர் மாதத்திலும் அரசகரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சை நடாத்தப்படும்.

04.3 எழுத்துப் பரீட்சையில் தோற்றுவதற்கு அனைத்து விண்ணப்பதாரர்களும் ரூபா 500/= ஐப் பரீட்சை கட்டணமாக செலுத்துதல் வேண்டும். அப் பரீட்சைக் கட்டணத்தை இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையில் "இராஜகிரிய, இலங்கை வங்கியில் உள்ள அரசகரும மொழிகள் ஆணையாளரின் 7041541 எனும் இலக்கம் கொண்ட கணக்கிற்கு" வைப்பிலிட வேண்டியதோடு அப் படிவத்தில் வைப்பாளரின் பெயரையும் முகவரியையும் குறிப்பிடவேண்டிய இடத்தில் விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரிக்கு மேலதிகமாக தேசிய அடையாள அட்டை இலக்கத்துடன் Exam எனக் குறிப்பிட்டு, பணம் செலுத்தியதன் பின்னர் வங்கியினால் வழங்கப்படும் பற்றுச் சீட்டில் கணனியினால் அச்சிடப்பட்ட இலக்கம் (நான்கு பகுதிகளைக் கொண்ட) மற்றும் திகதியை அரசகரும மொழிகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் காணப்படும் உரிய கூட்டில் குறிப்பிடல் வேண்டும்.

04.3.1 கவனத்தில் கொள்ளவும் - குறித்த வங்கிப் பற்றுச் சீட்டை பரீட்சை அனுமதியட்டையுடன் இணைத்து நீங்கள் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

04.4 பரீட்சையில் சித்தியடைய வேண்டுமாயின் 40%ற்கு குறையாத புள்ளிகளைப் பெறல் வேண்டும். இப் பரீட்சையின் விடைத்தாள்கள் மீளாய்வு செய்யப்பட மாட்டாது. அப் பரீட்சைகளின் பெறுபேறுகள் முறையே மே மற்றும் நவம்பர் மாதங்களில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் அரசகரும மொழிகள் ஆணையாளருக்கு வழங்கப்படும். அவ்வாறே பரீட்சைப் பெறுபேறுகள் அந்தந்த பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்கப்பட மாட்டாது என்பதோடு, அரசகரும மொழிகள் திணைக்களத்தின் www.languagesdept.gov.lk என்னும் இணையத்தளத்தில் பெறுபேறுகள் வெளியிடப்படும்.

04.5 விண்ணப்பதாரருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்குத் தேவையான தகைமையைப் பெற்றுள்ளார் எனப் பொருள்படாது.

04.6 பரீட்சார்த்தியின் அடையாளத்தை உறுதிபடுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான பயணக் கடவுச்சீட்டு என்பன மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும். ஏதேனுமொரு காரணத்தினால் அவ்வாறு ஆளடையாளத்தை உறுதிப்படுத்தாமல் பரீட்சைக்கு சமுகமளிக்கும் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அதுபற்றிய விசாரணையின் பின்னர் அடையாள உறுதிப்பாட்டின் பின்னரே வழங்கப்படும்.

04.7 பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வழங்குதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இவ் எழுத்துப் பரீட்சை தொடர்பாக மேற் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகம் மற்றும்/அல்லது அரசகரும மொழிகள் ஆணையாளர் ஆகியோரின் தீர்மானமே முடிவானதாக இருக்கும்.

04.8 எழுத்துப் பரீட்சையினை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச் சட்டதிட்டங்கள் மீறப்பட்டால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு பரீட்சார்த்தி உட்படுதல் வேண்டும்.

## 05. அரசகரும மொழித் தேர்ச்சி வாய்மூலப் பரீட்சை

05.1 பின்வரும் எழுத்துத் தகைமைகளுள் ஒன்றையேனும் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் அரசகரும மொழித் தேர்ச்சி வாய்மூலப் பரீட்சைக்கு அரசகரும மொழிகள் திணைக்களத்தின் www.languagesdept.gov.lk என்னும் இணையத்தளத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

1) மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சையில் சித்தியடைதல்.
2) க.பொ.த (சா. த) பரீட்சையில் சிங்கள அல்லது தமிழ் மொழி மற்றும் இலக்கிய பாடத்தில் சித்தியடைதல்.
3) க.பொ.த (சா. த) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி இரண்டாம் மொழியில் சித்தியடைதல்.

05.2 வருடத்தின் எந்தவொரு திகதியிலும் வாய்மொழி மூலப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். அவ்வாறே விண்ணப்பிக்கும் போது மேற் குறித்த 04.1 ஆம் பந்தியிலுள்ள ஆலோசனைகளை பின்பற்ற வேண்டும். (மாதிரி விண்ணப்பப்படிவம் - இணைப்பு 2) எதிர் வரும் காலங்களில் இப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோருவதன் பொருட்டு வர்த்தமானியில் விளம்பரம் செய்யப்பட மாட்டாது.

05.3 வாய்மூலப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்கள் அனைவரும் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் வேண்டும். ஒவ்வொரு மட்டங்களுக்கும் உரிய பரீட்சைக் கட்டணம் பின்வருமாறு

| மற்றைய அரசகரும மொழித்தேர்ச்சி மட்டம் | கட்டணம் (ரூ) |
|---|---|
| மட்டம் I | ரூபா 1000.00 |
| மட்டம் II | ரூபா 700.00 |
| மட்டம் III | ரூபா 500.00 |
| மட்டம் IV | ரூபா 300.00 |

05.4 பரீட்சைக் கட்டணம் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையில் "இராஜகிரிய, இலங்கை வங்கியில் உள்ள அரசகரும மொழிகள் ஆணையாளரின் 7041541 எனும் இலக்கம் கொண்ட கணக்கிற்கு" வைப்பிலிட வேண்டியதோடு அப் படிவத்தில் வைப்பாளரின் பெயரையும் முகவரியையும் குறிப்பிடவேண்டிய இடத்தில் விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரிக்கு மேலதிகமாக தேசிய அடையாள அட்டை இலக்கத்துடன் Exam எனக் குறிப்பிட்டு, பணம் செலுத்தியதன் பின்னர் வங்கியினால் வழங்கப்படும் பற்றுச் சீட்டில் கணனியினால் அச்சிடப்பட்ட இலக்கம் (நான்கு பகுதிகளைக் கொண்ட) மற்றும் திகதியை அரசகரும மொழிகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் காணப்படும் உரிய கூட்டில் குறிப்பிடல் வேண்டும். குறித்த தொகையை செலுத்தியமையை உறுதிப்படுத்துவதற்கு வங்கிப் பற்றுச் சீட்டை செவிமடுத்தற் திறன் பரீட்சைக்கு சமுகமளிக்கையில் கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

05.5 வாய்மூலப் பரீட்சைக்கு கிடைக்கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அடிப்படையில் வாய்மூலப் பரீட்சையை நடாத்தும் திகதி குறித்து தீர்மானிக்கப்படும். எவ்வாறாயினும் வாய்மூலப் பரீட்சை நடாத்தப்படும் திகதி குறித்து ஒரு மாதத்திற்கு முன்னர் பரீட்சார்த்திகளுக்கு அறிவிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். இப் பரீட்சையானது செவிமடுத்தல் திறன் மதிப்பீடு மற்றும் பேச்சுத் திறன் மதிப்பீடு என்ற ரீதியில் இரு பகுதிகளைக் கொண்டது. அனைத்து மட்டங்களுக்குரிய செவிமடுத்தற் திறன் மதிப்பீட்டு பரீட்சைகள் இராஜகிரிய, கோட்டே வீதி, 341/7, பாஷா மந்திரய என்னும் இடத்தில் அமைந்துள்ள அரசகரும மொழிகள் திணைக்களத்தில் மட்டுமே நடாத்தப்படும். (இம் மதீப்பீட்டினை எதிர்வரும் காலங்களில் மாகாண மட்டத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடாத்தப்படும்). வாய்மொழித் திறன் மதிப்பீட்டுப் பரீட்சையானது விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையினைக் கருத்திற்கொண்டு மாவட்ட/ மாகாண மட்டங்களில் நடாத்தப்படும். பரீட்சையில் சித்தியடைவதற்காக அவ்விரு வகைகளிலும் 40% இற்கு குறையாத புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். பரீட்சைப் பெறுபேறுகள் உரிய பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட முறையில் அனுப்பப்படும் என்பதுடன், அவை அரசகரும மொழிகள் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் வெளியிடப்படும். இப் பரீட்சையில் விடைத்தாள்கள் மீளப் பரீட்சிக்கப்படமாட்டாது. வாய்மூலப் பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்கள் தொடர்பாக அரசகரும மொழிகள் ஆணையாளரின் தீர்மானமே முடிவானதாக இருக்கும்.

06. இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல் தேவையெனில் 0112888929 எனும் இலக்கத்தின் ஊடாக அரசகரும மொழிகள் ஆணையாளரைத் தொடர்பு கொள்ள முடியும் என்பதோடு, பதவிக்கேற்ப உத்தியோகத்தர்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சி மட்டத்தினை அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

ஒப்பம்/ ஜே. தடல்லகே
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

# அரசகரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சை - 2016 சிங்களம் / தமிழ் ((I,II,III,IV மட்டங்கள்)இலங்கை பரீட்சைத் திணைக்களம் /அரசகரும மொழிகள் திணைக்களம்

பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் மாவட்டம்:*

- Select Preferred District 1 - ▼ | - Select Preferred District 2 - ▼ | - Select Preferred District 3 - ▼

அரசகரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ள வேண்டிய மொழி:*

- Select Exam language - ▼

விண்ணப்பிக்கும் மட்டம்: *

- Select Exam Level - ▼

குறிப்பு :- தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ள வேண்டிய மொழி மற்றும் விண்ணப்பிக்கும் மட்டத்தினை சரியாக குறிப்பிடல் வேண்டும்.எக்காரணம் கொண்டும் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது .

விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (சிங்களம் அல்லது தமிழ்):

(உதாரணம்: සමරසිංහ ආරච්චිගේ සමන් කුමාර සමරසිංහ/உதாரணம்: சமரசிங்ஹ ஆரச்சிகே சமன் குமார சமரசிங்ஹ)

விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்): *

(உதாரணம்:SAMARASINGHE ARARACHIGE SAMAN KUMARA SAMARASINGHE) *

முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு விண்ணப்பதாரியின் பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்): *

(உதாரணம்:SAMARASINGHE, S.A.S.K) *

நிரந்தரமுகவரி (ஆங்கில பேரெழுத்தில்) (அனுமதிப் பத்திரம் மற்றும் பெறுபேறு, இம்முகவரிக்கே அனுப்பப்படும்.) : *

பணியாற்றும் அலுவலகம் அமைந்துள்ள மாவட்டம்:*

- பணியாற்றும் அலுவலகம் அமைந்த ▾

தேசிய அடையாளஅட்டை இலக்கம்:*

பெண் /ஆண் பால்: *

- Gender - ▾

தொலைபேசி இலக்கம் :*

+94

மின் அஞ்சல் முகவரி (ஈ-மெயில்) : *

நிரந்தர பதவி :

நீங்கள் விசேட தேவையுடைய உத்தியோகத்தரா ? *

◯ ஆம் ◯ இல்லை

01/2014 அல்லது 04/2014 சுற்றறிக்கையின் படி உரிய மட்டம் : *

பரீட்சைக் கட்டணம் :- ரூ:*

செலுத்திய வங்கிக் கிளை :

கணனி மூலம் அச்சிடப்பட்ட இலக்கம் : * (உதாரணம்: 639/PF166654/1/19)

செலுத்திய திகதி : *

மேற்குறித்த விபரங்கள் சரியானவை எனவும், பரீட்சை சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுகின்றேன் எனவும்,பரீட்சை குறித்த எந்தவொரு விடயம் தொடர்பிலும் அரசகரும மொழிகள் ஆணையாளரினால் எடுக்கப்படும் தீர்மானத்தை இறுதித் தீர்மானமாக ஏற்றுக்கொள்கிறேன் எனவும், பரீட்சை தொடர்பான அனைத்து நிபந்தனைகளையும் வாசித்து புரிந்து கொண்டேன் எனவும் நான் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன். *

☐ ஏற்றுக் கொள்கின்றேன்

சரிபார்த்தல் குறியீட்டை உள்ளிடவும்




Enter the characters as seen on the image above (case insensitive):

சமர்ப்பிக்கவும்

# அரசகரும மொழித் தேர்ச்சி வாய்மூலப் பரீட்சை

சிங்களம் / தமிழ் (I, II, III, IV மட்டங்கள்)

அரசகரும மொழிகள் திணைக்களம்

தகைமை பெற்ற வாய்மொழி மூலப் பரீட்சையை தெரிவு செய்க.

- (●) க.பொ.த. (சா/த) தாய்மொழி சித்தி.
- ( ) க.பொ.த. (சா/த) இரண்டாம்மொழி சித்தி.
- ( ) அரசகரும மொழிகள் திணைக்கள எழுத்துப் பரீட்சையில் சித்தி.

வருடம் : 1980

சுட்டெண் : Eg : 1234567

விடயம் : Eg : Sinhala

விடய எண் : Eg : 021

**பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் மாவட்டம்** :*

- Select Preferred District 1 -

**அரசகரும மொழித் தேர்ச்சியினை பெற்றுக் கொள்ள வேண்டிய மொழி** :*

**விண்ணப்பிக்கும் மட்டம்** :*

விண்ணப்பதாரியின் முழுப்பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) :*

**(உதாரணம்** :- SAMARASINGHE ARACHCHIGE SAMAN KUMARA SAMARASINGHE**)**

ENTER FULL NAME

முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு விண்ணப்பதாரியின் பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) :*

**(உதாரணம்** :- SAMARASINGHE S A S K**)**

ENTER NAME WITH INITIALS

பால் : *

பிறந்த திகதி : *

1980 1 20

நிரந்தர முகவரி (ஆங்கில பேரெழுத்துக்களில்) (அனுமதிப் பத்திரம் மற்றும் பெறுபேறு இம்முகவரிக்கு அனுப்பப்படும்) :*

ENTER YOUR ADDRESS

தபால் மாவட்டம் :* தபால் நகரம் :* தபால் குறியீடு :

நிரந்தர பதவி :

Enter Your Job Position

நீங்கள் விசேட தேவையுடைய உத்தியோகத்தரா? :*

ஆம் இல்லை

பரீட்சை கட்டணம் (ரூபா) :*

கட்டணம் செலுத்திய வங்கிக் கிளை :*

வங்கி வைப்புச்சீட்டு இல :*

செலுத்திய திகதி : *

என்னால் மேற்குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியானவை எனவும், பரீட்சை சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படுகிறேன் எனவும், பரீட்சை குறித்து எந்தவொரு விடயம் தொடர்பிலும் அரசகரும மொழிகள் ஆணையாளரினால் எடுக்கப்படும் தீர்மானத்தை இறுதித் தீர்மானமாக ஏற்றுக் கொள்கிறேன் எனவும், பரீட்சை தொடர்பான அனைத்து நிபந்தனைகளையும் வாசித்து புரிந்து கொண்டேன் எனவும் நான் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.*

☐ உடன் படுகிறேன்

சரிபார்த்தல் குறியீட்டை உள்ளடக்கவும்




Enter the characters as seen on the image above (case insensitive):

சமர்ப்பிக்கவும்

இணைப்பு0 3

**பரீட்சை நிலையம் அமைந்துள்ள மாவட்டம் / நகரம் மற்றும்**
**மாவட்ட இலக்கம் / நகர இலக்கம்**

| மாகாணம் | மாவட்டம்/நகரம் | மாவட்ட இலக்கம்/ /நகர இலக்கம் |
|---|---|---|
| மேல் மாகாணம் | கொழும்பு<br>கம்பஹா<br>களுத்துறை | 1<br>2<br>3 |
| வடமேல் மாகாணம் | குருநாகல்<br>புத்தளம் (சிலாபம்) | 4<br>5 |
| தென் மாகாணம் | காலி<br>மாத்தறை<br>அம்பாந்தோட்டை (தங்கல்லை) | 6<br>7<br>8 |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி<br>கேகாலை | 9<br>10 |
| ஊவா மாகாணம் | பதுளை<br>மொனராகலை | 11<br>12 |
| மத்திய மாகாணம் | கண்டி<br>மாத்தளை<br>நுவரெலியா | 13<br>14<br>15 |
| வட மாகாணம் | அனுராதபுரம்<br>பொலன்னறுவை | 16<br>17 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம்<br>வவுனியா<br>முல்லைத்தீவு<br>கிளிநொச்சி<br>மன்னார் | 18<br>19<br>20<br>21<br>22 |
| கிழக்கு மாகாணம் | திருகோணமலை<br>மட்டக்களப்பு<br>அம்பாறை | 23<br>24<br>25 |